**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP. 157/2019</u>**

**<u>நாள் : 21.01.2025</u>**

ம.சா.1 கல்பனா மறு உத்தரவின் பேரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் சார்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

1. காவல் துறையினர் என்னிடம் ஏதும் எழுதி வாங்கினார்களா என்றால் இல்லை. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் யார் வாகனத்தை ஓட்டிச் சென்றது என்று விவரம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் என்னுடைய அப்பா தான் ஓட்டினார். நிலத்தில் இருந்து வீட்டிற்கு போகும் போது தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். நெடுஞ்சாலையில் நானும் என்னுடைய அப்பாவும் இடது புறமாக சென்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான்.

2. ம.சா.ஆ.12 வரைப்படத்தில் நெடுஞ்சாலையின் வலது புறமாக விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்லியது போல் பின்னால் இருந்து வந்த வாகனம் இடது புறமாக சென்று கொண்டிருந்த எங்கள் மீது மோதியதாக சொல்வது தவறு என்றும், நாங்கள் தான் இடது புறத்தில் இருந்து வலது புறமாக திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வலது புறமாக எங்கள் வீட்டிற்கு செல்வதற்கு வழி இருந்ததால் மெதுவாகதான் சென்றோம். ம.சா.ஆ.11 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் நாங்கள் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் பின் புறம் சேதம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றும், அதனால் நான் சொல்லியது போல் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

3. வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முதலில் சிகிச்சைப் பெற்றதாக சொல்லி நிலையில் அந்த மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பொங்களூர் நாராயணா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். அதற்கு உண்டான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் காயம் ஏற்படவில்லை என்றும் இவ்வழக்கிற்காக ஆவணங்களை தயாரித்து சிகிச்சை பெற்றதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாதம் ரூ.15,000/- வருமானம் இருப்பதாக சொல்லிய நிலையில் எதன் மூலம் வருமானம் வருகிறது என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. விபத்து தொடர்பாக பட்டியல் வழக்கு எண் 33/2020 யில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1 ஆம் எதிர்மனுதாரர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தந்தைக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், வாகனம் ஓட்டத் தெரியாமல் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/. V.L. சந்தோஷ்,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.